# சித்தர்களின் ஆன்ம வழிபாடும் சமுதாய அறமும்

**முனைவர் சி. தீபா**

**இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை**

**வி எல் பி ஜானகியம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி**

**கோவைப்புதூர் .**

**5**

**ஆய்வுச் சுருக்கம்**

'**சித்தர்களின் ஆன்ம வழிபாடும் சமுதாய அறமும்**' என்கின்ற தலைப்பிலான இந்தக் கட்டுரை மெய்ப்பொருள் எது என்பதையும் மானுடர்கள் உணர வேண்டிய உண்மை வழிபாடு எது என்பதையும் வழிபாடு என்கின்ற பெயரில் இன்று சமுதாயத்தில் நிலவி வரும் மூடநம்பிக்கைகளைக் கண்டிக்கும் நிலையில் அதே நேரத்தில் வளமான சமுதாயம் அமைய ஒவ்வொரு மனிதனுக்கும் தனி மனித அறம் எவ்வளவு இன்றியமையாதது என்பதையும் உணர்த்தும் வகையில் கட்டுரை அமைகின்றது.

**முன்னுரை**

"எனக்கு முன்னே சித்தர் பலர் இருந்தாரப்பா" என்பது மகாகவி பாரதியின் வாக்கு. சித்தர்கள் பலர் இருந்தனர் என்பது உண்மை .சித்தர்கள் தமிழகத்தில் மட்டும் வாழ்ந்தவர்கள் இல்லை. சித்தர்கள் ஓரிடத்தில் தங்கியவர்களும் இல்லை நாடெங்கும் காடெங்கும் தெரிந்தவர்களே என்றாலும் அவர்களின் ஆன்ம வழிபாட்டில் சமுதாயத்திற்குக் கூறிய அறத்திலும் ஒருமைப்பாடு உண்டு. எல்லாருடைய ஞானத்திலும் ஒற்றுமை நிலவுகிறது. அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையிலும் விஞ்ஞானம் ஒத்துக்கொள்ளும் நிலையிலும் ஆன்மீக அறிவியலோடு பொருந்தும் இலக்கியம் சித்தர் இலக்கியம். அவ்வகையில் நல்ல சமுதாயம் அமைய அவர்கள் எடுத்துக் கொண்ட இருவகைக் கருதுகோள்கள். ஒன்று ஆன்மீகம் ,மற்றொன்று அறம் அவை குறித்த சிந்தனைகளையே இக்கட்டுரை ஆராய்கின்றது .

உடல், உள்ளம் ,உயிர் இவற்றை நுணுகி ஆராய்ந்தவர்களே சித்தர்கள். உடற்பயிற்சியினால் உள்ளத்தைப் பக்குவம் செய்து பக்குவப்பட்ட உள்ளத்தால் உயிரைக் காத்தனர். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பது திருமூலரின் முழக்கம். இதுவே உலகளாவிய ஆன்மீக ஒருமைப்பாடு இது போன்ற பரந்த மனப்பான்மை கொண்ட சித்தர் பாடல்கள் தமிழில் ஏராளமாய் உள்ளன. சித்தர்களிலே சிவவாக்கியர் ஒரு தனி இடம் பெறுகின்றார். அவர் பாடல்கள் படிக்க எளிமையாக இருந்தாலும் மிக ஆழமான பொருளைக் கொண்டவை. பாடல்களின் போக்கிலே ஆன்ம வேகம் தென்படுகின்றது .

எள்ளில் எண்ணெய் மறைந்திருப்பது போல அஞ்ஞானத்தால் ஆன்மா மறைக்கப்பட்டுள்ளது. மனிதன் இறைவனைத் தேடிக் கண்டுபிடிக்காத இடம் வெளியில் இல்லை என்று உணர்ந்த இறைவன் அவன் உள்ளத்திலேயே ஒளிந்து கொண்டானாம் .

**“ கள்ளப் பெருமக்கள் காண்பர் குழு என்று**
**உள்ளத்தில் உள்ளே ஒளிந்து இருந்து ஆளுமே”** ( திருமூலர்)

உடம்பினுள் உள்ளமும் உள்ளத்தில் மெய்ப்பொருளும் மறைந்து நிற்கிறது. மனிதன் அதனை உள் சென்று தேடாமல் வெளியே சென்று தேடி, ஓடி ,நாடி, வாடி அலைகின்றான். இதனைத் தான் சிவவாக்கியர் ,

**ஓடி ஓடி ஓடி ஓடி**
**உட்கலந்த ஜோதியே**
**நாடி நாடி நாடி நாடி**
**நாட்களும் கழிந்து போய்**
**வாடி வாடி வாடி வாடி**
**மாண்டு போன மாந்தர்கள்**
**கோடி கோடி கோடி கோடி**
**எண்ணிறந்த கோடியே!**

என்று பாடுகின்றார். உள்ளில் இருக்கும் ஜோதியை உணராமல் ஓடி ஓடி, நாடி நாடி, நாட்கள் கழிந்து போகின்றன என்று மனிதன் வாழ்வைப் படம் பிடிக்கிறார். நாடோடி வாழ்க்கை வாழ்ந்தாலும் சித்தர்கள் சமுதாயத்தைப் பற்றி முழுமையான கண்ணோட்டம் கொண்டவர்கள், அக்கறை கொண்டவர்கள் .

மனித வாழ்வில் இறைவனை உள்ளத்தில் கண்டு மகிழ்வதே பேரானந்தம் என்று உணர்ந்தவர்கள். புறவழிபாட்டை விடுத்து அக வழிபாட்டை மனிதன் உணர்ந்தால், சமுதாயம் ஏற்றத்தாழ்வு அற்றதாகிவிடும். அனைவரும் சமம் என்ற உண்மை புலப்படும் என்பதை உணர்த்த அரும்பாடுபட்டனர்.

**"அன்பான பக்தர் அகக் கோயில் காத்தற்கே**
**இன்பான கோயிலடி குதம்பாய்**
**இன்பான கோயிலடி"** **(குதம்பைச் சித்தர் 181)**

**“தன்னை அறிந்து ஒழுகுவார் தன்னை மறைப்பார்**
**தன்னை அறியாத வரே தன்னைக் காட்டுவார்**
**தன்னை ஒரு கடவுளாய்ப் பேண நினையார்”** **(பாம்பாட்டிச் சித்தர்)**

என்ற பாடல்கள் வழி கடவுளை உள்ளத்தில் தேட வேண்டும் என்பதை உணர்த்தினார்கள் சித்தர்கள் .மேலும் சிவவாக்கியர் ,

**என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்தது இல்லையே**
**என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்து கொண்டபின்**
**என்னிலே இருந்த ஒன்றை யாவர்காண வல்லரோ**
**என்னிலே இருந்திருந்து யான் உணர்ந்து கொண்டேனே "** **(சிவவாக்கியர்)**

என்றும்,

**" ஊரும் நாடும் காடும் தேடி உழன்று தேடும் ஊமைகாள்**
**நேரதாக உம்முளே அறிந்து உணர்ந்து கொள்ளுமே "**

என்றும் பாடுகின்றார்.

உள்ளத்தில் உறைகின்ற இறைவனைக் காண சரியை, கிரியை,யோகம் ,ஞானம் என்ற

மார்க்கங்களை நமது பன்னிரு திருமுறை நாயன்மார்களும் எடுத்துரைத்தனர் .'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்கிற அப்பரின் வாக்கும் வேறொன்றும் எண்ணாது இறைப் பணியில் ஒன்றி இருத்தல் என்பதுவேயாகும்.இதுவும் ஒருவகை தியானமே .அதுவே மெய்ப்பொருளும் ஆகிறது .ஆன்ம அனுபவம் என்பது ஒரு பெரிய நுட்பம். தாமாகவே முயன்று தனது சொந்த அனுபவத்தில் மூழ்க வேண்டிய பேரின்பம். இறைவனை "நினைப்பதன்றிக் கண்டிலேன்" என்கிறார் சிவவாக்கியர்.இறைவன் இந்த உடம்புக்குள்ளே தான் இருக்கிறான் புதிதாக உள்ளே நுழையவில்லை நாம் பிறந்த போதே அந்த மெய்ப்பொருளும் உட்பகுந்து தான் இருக்கிறது . இறைநிலை அடைதல் என்பது இறைவனோடு கலந்து ஒரு சமநிலையைப் பெறுதல் எனலாம் .

**செய்ய தெங்கிலே இளநீர் சேர்ந்த காரணங்கள் போல்**

**ஐயன் வந்து இங்கு என் உளம்புகுந்து கோயில் கொண்டனன்**

**ஐயன் வந்து இங்கு என் உளம்புகுந்து கோயில் கொண்டபின்**

**வையகத்தில் மாந்தர் முன்னம் வாய் திறப்பதில்லையே" (சிவவாக்கியர்)**

தேங்காய் உள்ளே இளநீர் எப்போது புகுந்தது என்றால் தேங்காய் உருவாகும்போதே இளநீரும் அதில் கலந்து தான் இருக்கிறது. தேங்காய் முதிர முதிர இளநீர் வளம் சுரந்து நிறைகின்றது. அதுபோல இறையின்பமானது உடம்புக்குள்ளே சுரந்து வளர வளர அவன் நம்முளே கோயில் கொண்டிருப்பதை உணர வேண்டும்.

சிவவாக்கியர் சாதாரண மனிதனிலிருந்து ஞானிகள் வரை அனைவருக்கும் பல நிலைகளில் எடுத்துச் சொல்லி இருக்கிறார். மெய்ஞானத்தை தனது அனுபவத்தில் கண்டவர். இறைவன் கோவில் கொண்டு வீற்றிருக்கும் உள்ளத்தில் உள்ளே அந்த இறைவனுக்கு, **"பூவும் நீரும் என் மனம் பொருந்து கோயில் என் உளம்"** என்று அக வழிபாட்டிற்கு பூவும் நீரும் அவன் அமர்ந்த கோயிலும் மனம் தான் என்கிறார் .

**சமுதாய அறம்**

பரம்பொருள் என்றும், கடவுள் என்றும், இறையாற்றல் என்றும், ஆன்ம வழிபாடு என்றும் பேசிய சித்தர்கள் தான் கோவில்களையும் சடங்குகளையும் மூட நம்பிக்கைகளையும் உதறிக் கொண்டு பேசுகின்றனர் .

**நட்ட கல்லை தெய்வமென்று நாலு புட்பம் சாத்தியே**

**சுற்றி வந்து முனமுனை என்று சொல்லும் மந்திரம் ஏதடா**

**நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்**

**சுட்ட சட்டி சட்டுவம் கறி சுவை அறியுமோ (சிவவாக்கியர் பாடல் 496)**

சித்தர்கள் சமய அனுபவத்தின் கட்டமைப்பை நன்கு உணர்ந்தவர்கள். மரபுகளில் இருந்து விடுபட வேண்டும் என்பதே சித்தர்களின் மெய் உணர்வுக் கொள்கை. உருவ வழிபாட்டை மிகக் கடுமையாக கண்டிப்பவர் சிவவாக்கியர் ஆவார் உருவ வழிபாட்டைக் கண்டிப்பதோடு

மட்டுமல்லாமல் சடங்குகள், யாத்திரைகள், புனித நீராட்டங்கள் என்று அனைத்தையுமே கண்டிக்கிறார்கள். பூக்களைக் கொண்டு செய்யப்படுகிற புறபூசை எப்படி உண்மையான பூசையாக முடியும்? என்பதையும் பாம்பாட்டிச் சித்தர் தனது பாடல் அடிகளில் சுட்டுகிறார்.

**"பூசை செய்ததாலே சுத்த போதும் வருமோ**

**பூமி பலம் செய்ததனால் புண்ணியம் உண்டோ?"** **(பாம்பாட்டிச் சித்தர் பாடல் - 100)**

சித்தர்கள் கடவுள் மறுப்பாளர்கள் அல்லர். அவர்கள் ஒற்றைக் கடவுளின் இருப்பை (ஒன்றே குலம் ஒருவனே தேவன்) விரும்புகிறவர்கள். தங்கம் எவ்வாறு வெவ்வேறு வடிவங்கள் பெற்று ஒளிர்கிறதோ அதுபோல கடவுளும் சிவன், திருமால் என்று வேறு வேறு பெயர்களும் உருவங்களும் உடையவராகிறார். அவற்றில் பேதம் பாராட்டுவது மூடத்தனம் என்று கண்டிக்கின்றனர்.

**தனிமனித அறம்**

கடுவெளிச்சித்தரின் ஒரு பாடல் 'பாபம் செய்யாதிரு மனமே' என்று தொடங்குகிறது. தீய செயல்களைசா செய்து சமுதாயத்தில் பெரிய ஆளாய் இருப்பவர்கள் இன்று ஏராளம் அவர்களுக்கு பாவங்களைப் பற்றிய எண்ணமோ கவனமோ இருக்காது. ஆனால் மரண நிலையில் இந்த பாவங்கள் சுற்றிச் சுழலும். எமன் வெளியிலிருந்து வர வேண்டியதில்லை உள்ளேயே தோன்றுவான் .

**"பாபம் செய்யாதிரு மனமே- நாளைக்**

**கோபம் செய்தே எமன் கொண்டோடிப் போவான்**

**பாபம் செய்யாதிரு மனமே !** (கடுவெளிச்சித்தர்)

என்றும் "சொல்லரும் சூது பொய் மேலும் செய்தால் சுற்றத்தை முற்றாய்த் துடைத்திடும்" என்றும் "பெண்ணாசை கொண்டு பெருக்கம் ஆளாதே "என்றும் சித்தர் பாடல்கள் கூறுகின்றன .

**சாதி பேத மறுப்பு**

அகப்பேய்ச் சித்தர் இறைவனை தன்னுள்ளே கண்டவர்களுக்கு , சாதி பேதம் இல்லை என்கிறார் .

**எவ்வகையாக நன்னீதி அவை**

**யெல்லாம் அறிந்தே எடுத்து நீ போதி**

**ஒவ்வா வென்ற பல சாதி யாவும் ஒன்று**

**என்பது அறிந்தே உணர்ந்திடு ஓதி!** என்று பாடுகிறார் .

தனிமனித அறமே சமுதாய அறத்திற்கு அடிகோலுகிறது அவ்வகையில் ,

**கஞ்சா புகைப்பிடியாதே -வெறி**

**காட்டிமயக்கிடும்கள்குடியாதே** (பட்டினத்தார்)

மேலும்,

**பொய்யை ஒழியாய்ப் புலாலை விடாய் காளத்தி**

**ஐயரை எண்ணாய், அறம் செய்தாய்**

என்ற பாடல்கள் வழி அவர் போதித்த தனிமனித அறம் புலனாகின்றது. சமுதாயத்தில் கடவுள் பெயரால் போலித் துறவிகள் பெருகிவிட்ட நிலையில் சித்தர்களின் பாடல்கள் உண்மையான தேடல் எது என்று உணர்த்துகிறது. சமயங்கள் அவரவர் கொள்கைகளையும் அவரவர் தெய்வத்தையும் முன்னிறுத்திப் பிரிவினை ஏற்படுத்தி வரும் இன்றைய நிலையில், சித்தர்கள் ,

**ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு**

**அங்குமிங்கும் ஆகின்ற ஆதிமூர்த்தி ஒன்றேயாம்"**

என்கின்ற பாடல் அடிகளில் ஓர் இறைக் கோட்பாட்டை முன்னிறுத்துகின்றனர் .

**முடிவுரை**

சித்தர்கள் தங்களுக்கு என்று தனித்தன்மையுடன் கொள்கைகளை வகுத்து வாழ்ந்தனர். மனித சமுதாயத்திற்கு வாழ்வின் மெய்த்துவம் என்ன என்பதை உடல் உள்ளம் ,உயிர் என்கின்ற நிலை கொண்டு புதிய மானுடக் கொள்கையை விளக்கினர். பரம்பொருளுடன் அவர்கள் கொண்ட ஒரு நேர்முக சந்திப்பின் அனுபவம் . அந்த அனுபவம் சமூக நோக்கினை உள்ளடக்கியது என்பதையும் இக்கட்டுரை ஆழமாகப் பதிவு செய்கின்றது.

**துணை நூல் பட்டியல்**

1.**சித்தர் இலக்கியம் 6**, ஆசிரியர், மீ.ப.சோமசுந்தரம் ,அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.

2.**தமிழ் சித்தர் மரபு,** பேராசிரியர் ,முனைவர் டி என் கணபதி, ரவி பப்ளிகேஷன்ஸ் சென்னை 83

3..**சித்தர்களின் சித்தாந்தம் ,** முனைவர் பழ .சம்பத்து தமிழ் விரிவுரையாளர் இளம்பிறை பதிப்பகம் திண்டிவனம்